# IN THE COURT OF SUBORDINATE JUDGE, SANKARI

MCOP.No. 4/2017 Date: 15.06.2023

PW1- புனிதா

**சாட்சி மீண்டும் முன்னிலையானதன் பேரில் 3- ஆம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

விபத்தின் போது என் வயது 35. மனுவில் 42 என்று சொல்லியிருந்தால் அது தவறு. நான் பி.ஏ. படித்து முடித்துள்ளேன். நான் தற்போது விவசாயம் வேலை செய்கிறேன். என் குடும்பத்திற்கு சொந்தமாக நிலம் உள்ளது. என் வருமானத்தை காண்பிக்க நான் ஆதரம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் பயணம் செய்த இரு சக்கர வாகனத்தின் ஓட்டுனரின் கவனக்குறைவாலும், அவர் அதிவேகமாக ஓட்டியதால் தான் இந்த விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான். போக்குவரத்து வீதிகளை அவர் மீறியதால் தான் விபத்து ஏற்பட்டது என்றாலும் அதனால் 1, 2 எதிர்மனுதாரர்கள் தான் எனக்கு இழப்பீடு கொடுக்க வேண்டும் என்றால் சரியல்ல. எனக்கு ஏற்பட்ட காயங்கள் குணமாகிவிட்டது என்றால் சரியல்ல. எனக்கு ஞாபக மறதி இல்லை என்றால் சரியல்ல. முதல் விசாரணைக்கான விவரங்களை நான் தான் சொன்னேன். எனக்கு ஏற்பட்ட மொத்த மருத்துவ செலவு ரூ. 84,402/- மட்டும் என்றால் மற்ற செலவுகளுக்கான ரசீதிகள் தொலைந்து விட்டது. எனக்கு ஏற்பட்ட காயங்கள் குணமாகிவிட்டதாலும் 1- ஆம் எதிர்மனுதாரர் போக்குவரத்து வீதிகளை மீறி போக்குவரத்து ஓட்டியதாலும் 3- ஆம் எதிர்மனுதாரர் பொறுத்தளவில் இந்த மனு தள்ளுபடி ஆகவேண்டும் என்றாலும் சரியல்ல.

ஒம்/- புனிதா

ஒம்/- திரு. ந. பன்னீர்செல்வம்
சார்பு நீதிபதி, சங்ககிரி